விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 346 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 14 புதன்கிழமை (30.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சட்டமூலத்தை அமுலாக்கி

## உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைக்க நடவடிக்கை

ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வரவு- செலவு திட்டத்துக்கான இறுதி வாக்கெடுப்பின் பின்னர் சட்டமூலமொன்றை சமர்ப்பித்து உள்ளூராட்சிமன்ற தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸ் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தேர்தல் 11

பல்கலைக்குள் பிக்குவாக நுழைவோர்

## சாதாரணமாக வெளியேறுகின்றனர்

சபையில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

பிக்குகளாக பல்கலைக்கழகங்களுக்குள் பிரவேசிக்கும் பலர் சாதாரண மாணவர்களாக பட்டத்தை பெற்றுக்கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி இந்த நிலைமையை தடுப்பதற்குத்தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளதாகக் கூறினார். (ம-7)

கடன் பொறி குறித்து

## அலி சப்ரி கருத்துக்கு சீனா வரவேற்பு!

(கொழும்பு)

சீனாவின் கடன்பொறி குறித்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ள கருத்துக்களை சீனா வரவேற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி சமீபத்தில் இலங்கை சீனாவிடம் சென்று நிதி உத 11

# புலிகளை தமிழர்கள் நினைவுகூர முடியாது

## பாராளுமன்றில் இனவாதத்தை தொடர்ந்து கக்கும் சரத்வீரசேகர



- பயங்கரவாதிகள், கொலைகாரர்களை நினைவு கூருவது பாவம்.
- யுத்தத்தில் உயிரிழந்தவர்களை தமிழர்கள் தமது வீடுகளுக்குள் இருந்தவாறு நினைவு கூரலாம்.
- சமஷ்டி என்று நாடு பிரிந்தால் பௌத்தத்தைக் காக்க முடியாது.

( 11ஆம் பக்கம் பார்க்க)

யாழில் மூச்சு விடுவதற்கு

## சிரமப்பட்ட 11 மாத பெண்குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

மூச்சு விடுவதற்கு கஷ்டப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 11 மாத பெண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

கரைநகரைச் சேர்ந்த 11 மாதமேயான 11

## மண்ணெண்ணெய்க்காக யாழில் நீண்ட வரிசை



11

## நாட்டைவிட்டு வெளியேறுவதை புத்திஜீவிகள் நிறுத்த வேண்டும்

பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

இலங்கையில் பல இலட்சங்களை செலவழித்து படித்து வெளிநாடு செல்லும் மருத்துவம் மற்றும் பொறியியல் மாணவர்கள் குறித்து ஜனாதிபதி நேற்று பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு மாணவர்கள் வெளிநாடு செல்லும் பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் கலந்துரையாடி ஏதாவது விடை காண வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் தங்கியிருந்து மருத்துவப்படிப்பை முடிக்கவே மாண 11

மோசமான பொருளாதாரம் காரணமாக

## வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்

அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலைமை காரணமாக வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் நாட்டைவிட்டு வெளியேற முனைவதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அதன்படி, கடந்த ஆறு மாதங்களில் தமிழ்நாடு, வியட்நாம் மற்றும் உக்ரைனுக்கு அதிகளவான வர்கள் சென்றுள்ளதாக பாராளுமன்றத்தில் அவர் தெரிவித்தார். 11

## மருந்து இறக்குமதிக்கான பணம் என்ன ஆனது?

சம்பிக்க சபையில் கேள்வி



(கொழும்பு)

உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு வழங்கிய பணத்தை, அரச மருந்துகள் கூட்டுத்தாபனம் முறையாக பயன்படுத்தவில்லை என்பது கோப் குழுவில் தெளிவாகத் தெரியவந்துள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### இந்திய நிதியுதவியின் கீழ்

## அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இந்திய நிதியுதவியின் கீழ் அதிக விளைவுகளைக் கொண்ட சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்திய நிதியுதவியின் கீழ் அதிக விளைவுகளைக் கொண்ட சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டம் 2005ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றது.

அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக 2005-2010, 2010-2015 மற்றும் 2015-2020 வரையான காலப்பகுதிகளுக் கான இரு நாடுகளுக்கிடை யில் புரிந்துணர்வு ஒப்பந்தங் களுக்கு கையொப்பமிடப்பட் டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தித் துறை களில் உட்கட்டமைப்பு வசதி களை வழங்குவதற்காக முன் னுரிமை வழங்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்கிடையில் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தம் செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

### ATM அட்டைகளை திருடி

## அதிலிருந்து பணத்தை எடுத்து போதை வாங்கிய நபர் கைது

(கொழும்பு)

வங்கி ATM அட்டைகளை திருடி, அதிலிருந்து பணத்தை எடுத்து போதைப்பொருள் வாங்கி, சூதாட்ட விடுதிகளில் செலவிட்ட முன்னாள் CTB ஊழியர் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கபுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டதன் பின்னர் எதிர் வரும் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த இரண்டு முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

400,000 ரூபாய்மோசடி செய்ததாக ஒரு முறைப்பாடும் மற்றையமுறைப்பாட்டில் 120,000 ரூபாய் மோசடி செய்யப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணை யில், அவர் எப்படி மோசடி செய் தார் என்பது தெரிய வந்தது.

ATM இயந்திரத்தில் அட்டையை செருகும் துளைக் குள் பொலித்தீன் பைகளை செருகியுள்ளார். அங்கு பணம் எடுக்க வருபவர் அந்த துளைக் குள் அட்டையை செலுத்தும் போது, அட்டை சிக்கிக் கொள் ளும். அப்போது சந்தேகநபர் முன்வந்து அட்டையை மீட் டெடுக்க உதவுகிறார்.

அட்டையை வெளியே எடுத்தவுடனே, உரிமையாளர் அலட்சியமாக இருக்கும் தரு ணத்தில், உரிய அட்டையை மறைத்து விட்டு, வேறு அட் டையை கொடுப்பார்.

இப்பொழுது சரியாக செயற் படுகிறதா என பார்ப்பதை போல பாவனை செய்து, அந்த நபர் இரகசிய பின் இலக் கத்தை குத்தும்வரை இயந் திரத்திற்கு அருகில் காத்தி ருந்தார். பின் இலக்கத்தை மனப்பாடம் செய்த பிறகு, அவர் அருகில் உள்ள ஏடிஎம் இயந்திரத்திற்குச் சென்று, அவர் திருடிய அட்டையில் இருந்து அதிகபட்சதொகையை எடுத்துள்ளார். (ம-7)

## புன்னாலைக்கட்டுவனில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

56 ஆயிரம் ரூபாய் பெறு மதியுடைய 1.56 கிராம் ஹெரோ யின் போதைப்பொருளினை தனது உடைமையில் வைத்தி ருந்தபோது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவுகள் மற்றும் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவல் அடிப்படை யில் குறித்த நபர் கைதானார்.

குறித்த நபர் விற்பனை செய்வதற்காக தனது வீட்டில் வைத்து சிறு பொதிகளை உருவாக்கிய பொழுது கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)


நல்லை மங்கையர்க்கரசியின்

**விழிநீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் கல்விசாரா ஊழியர் திரு. சிற்றம்பலம் கோடீஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் முருகன் சிற்றம்பலம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது விழிநீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம், யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் (C-5367)

**யா/நெல்லியடி மத்திய கல்லூரி**

தேசிய பாடசாலை

**சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு விடுதல்**

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை 01.01.2023 முதல் 31.12.2023 வரை குத்தகைக்கு விடுவதற்கு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விலைமனுப்படிவத்தை 30.11.2022 முதல் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**விலைமனுக்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 15.12.2022 என்பதோடு 19.12.2022 அன்று விலை மனுக்கள் திறக்கப்படும்.**

(C-5368) - அதிபர் -

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 01.11.1932



உதிர்வு 02.11.2022

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நாவலர் வீதி ஆனைப்பந்தியை வாழ்விடமாகவும் கொண்ட மலாயன் கபேயின் ஸ்தாபகர் காலஞ்சென்ற மு.கு. கதிரவேலு அவர்களின் அன்பு மனைவி

**அமரர் கதிரவேலு சிவயோகம்**

அம்மாவின் அந்தியேட்டி நிகழ்வு 30.11.2022 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக் கிருத்தியை நிகழ்வு 02.12.2022 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல.272, நாவலர் வீதி ஆனைப்பந்தியில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வு இடம் பெறும் என்பதனை அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மற்றும் நேரில் வந்து துக்கத்தில் கலந்து கொண்டோர்களுக்கும் குடும்பத் தினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(13625) - தகவல் - குடும்பத்தினர்

**கண்ணீர் அஞ்சலி**



தோற்றம் 18.04.1953 மறைவு 28.11.2022

எமது பிரதேச செயலக J/395 பொலிகண்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி கவிச்செல்வன் கிருஸ்ணானந்தி அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் கோபாலகிருஷ்ணன் பூலோகம்**

அவர்கள் 28.11.2022 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை

(C-5365)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவப் பெரு வள்ளலார் சேர். பொன் இராமநாதனின் 92 ஆவது குருபூசை தினம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இராமநாதன் அறக்கட்டளையைச் சேர்ந்த பேராசிரியர் த.சிற்றம்பலம், இந்து கற்கைகள் பீடாதிபதி பிரம்ம ஸ்ரீ ச. பத்மநாபன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சிவசாந்தன், கஜிந்தன்)

## வியட்நாமில் உயிரிழந்த இளைஞன்

# உடலை நாட்டுக்கு கொண்டுவர புலம்பெயர் அமைப்புகள் தயார்

### பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

வியட்நாமில் உயிரிழந்த சுந்தரலிங்கம் கிரிதரனின் உடலை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான கட்டணத்தை வழங்குவதற்கு புலம்பெயர் அமைப்புகள் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

அண்மையில் படகு மூலம் கனடாவுக்குச் செல்ல முயன்ற 303 இலங்கையர்கள் சர்வதேச கடலில் மீட்கப்பட்டு வியட்நாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். இருவர் தங்களை மீளவும் இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என தெரிவித்து தங்களது உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்தனர்.

அவர்களில் 37 வயதான சுந்தரலிங்கம் கிரிதரன் உயிரிழந்தார். இந்த நிலையில், அவரது உடலை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு 30 இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாக அவரது மனைவி அறிவித்திருந்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சு, போக்குவரத்து அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு உள்ளிட்ட அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அவரது உடலை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு குறித்த நபரின் மனைவியுடன் கலந்துரையாடியுள்ளதாக தெரிவித்தார்.

இந்த விடயத்தில் கலந்துரையாடி தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சருக்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், குறித்த நபரின் உடலை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான கட்டணத்தை வழங்குவதற்கு புலம்பெயர் அமைப்புகள் தயாராக இருப்பதாக தெரிவித்தார். (நி)

## நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் கறுப்புப்பட்டியலில் இணைக்கப்படுவர்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

அனுமதியைப் பெறாமல் நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவர் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை உரையாற்றியபோதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

மருத்துவ நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதை தடுக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு ஐந்து வருட விடுமுறை காலம் வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் மருத்துவ நிபுணர்களுக்கும் பொருந்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை நாடுவோர் தேவையான அனுமதியைப் பெற்று நாட்டைவிட்டு வெளியேற முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் சேவையிலிருந்து வெளியேறியவர்களாகக் கருதப்பட்டு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த உலகின் அதிசொகுசு உல்லாச கப்பல்



(கொழும்பு)

உலகின் அதி சொகுசு வாய்ந்த 'மெயின் ஷிப் 5' கப்பல் 2000 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

குறித்த கப்பலில், 2,030 சுற்றுலாப் பயணிகளும் 945 கப்பல் பணியாளர்களும் வந்துள்ளனர்.

இந்த கப்பலில் நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் ஐரோப்பியாவை சேர்ந்தவர்கள் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தமது டுவிட்டர் பதிவினூடாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதேபோன்ற நான்கு சொகுசு கப்பல்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை துறைமுக தகவல் தரப்புகள் தெரிவித்துள்ளன. (நி)

## உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த இலங்கைத்தமிழன்

(டோகா)

FIFA உலகக்கிண்ணப் போட்டியில் "இலங்கைக்கு வருகை தாருங்கள்" என்ற பதாகையுடன் நின்ற இலங்கை இளைஞன் அங்கிருந்த பார்வையாளர்களின் கவனத்தையும் தன்பக்கம் ஈர்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கட்டாரில் FIFA உலகக்கிண்ண போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியினை ஓரளவேனும் தீர்க்கும் வகையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு வருகை தர வைக்கும் நோக்கில் இலங்கையை சேர்ந்த கட்டாரில் பணிபுரியும் இளைஞன் பார்வையாளர் அரங்கில் "இலங்கைக்கு வருகை தாருங்கள்" என்ற வாசகத்துடன் கூடிய அட்டையினை கையில் ஏந்திய வாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டார். (நி)

# பெண்ணின் கைப்பையை திருடிய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சாரதி பயிற்சி பெற வந்த பெண்ணின் கைப்பையை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய பகுதியில் சாரதி பயிற்சி பெற வந்த பெண்ணொருவரின் கைப்பை மற்றும் 65 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசி என்பன கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருடப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பில் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் அரியாலை வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

முனியப்பர் ஆலய பகுதியில் சாரதி பயிற்சி பெற வரும் பெண்களை இலக்கு வைத்து திருட்டுக் கும்பல் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறது. பெண்கள் தமது மோட்டார் சைக்கிள் இருக்கைக்கு கீழ் தமது உடைமைகளை வைத்து விட்டு செல்வதனை அவதானிக்கும் கும்பல் அவற்றை திருடி வருகிறது. எனவே தமது உடைமைகள் தொடர்பில் கவனமாக இருக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்

# கால் இறுதி முன்போட்டிக்கு ஸ்கந்தாஸ்ரார் அணி தெரிவு



பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்-2022 தொடரின் 2 ஆவது போட்டியில் ஸ்கந்தா ஸ்ரார் அணி, யூனியன்ஸ் அணியை 72 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதி முன் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 20 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங் களை பெற்றது.

மிதூஸன்-43, சதீஸ்-13, அஜன்தன்-39, பிரசான்-25, டன்சன் ஆட்டமிழக்காது-29, டனஸ்ராஜ் ஆட்டமிழக்காது-13 ஓட்டங் களை பெற்றனர்.

பந்து வீச்சில் யூனியன்ஸ் அணியைச் சார்ந்த றஹிம் 4 ஓவர்களில் 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் ஜான்சன் 4 ஓவர்களில் 49 ஓட்டங்களைக் கொடுத்து -01 விக்கெட்டினையும் அருணன் 3 ஓவர்களில் 26 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டினையும் கைப்பற்றியுள்ளனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 15.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஜான்சன்-22, ஆகீசன்-11, லவன்ராஜ்-35, ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தாஸ்ரார் அணி சார்பாக் கிருஷ்ணியன் 4 ஓவர்களில் 19 ஓட்ட ங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் விஜிதரன் 4 ஓவர்களில் 10 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தர வரிசை பட்டியலுக்கு ஸ்கந்தாஸ்ரார் அணி 5.60 புள்ளிகளையும் யூனியன்ஸ் அணி 1.66 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

(4)



தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியன் வென்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 19 வயது ஆண்கள்அணி வீரர்களையும் அதே போட்டியில் சம்பியன் வென்ற மகாஜனக் கல்லூரி 17 மற்றும் 20 வயது பெண்கள் அணி வீராங்களைகளையும் வரவேற்கும் நிகழ்வு வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி தெல்லிப்பழை பிரதேச சபை வரை சென்றது. பின்னர் தெல்லிப்பழை பிரதேச செலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் வீர, வீராங்கனைகளுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. இரு கல்லூரிகளிலும் அந்தந்த வீரர்கள், வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள்- சிவசாந்தன், கணேசலிங்கம்,கஜிந்தன்)

## உலக கோப்பை கால்பந்து; கட்டாரை வீழ்த்தியது நெதர்லாந்து

கட்டாரில் நடைபெற்று வரும் உலக கோப்பை கால்பந்து தொடரின் ஏ பிரிவில் இரு லீக் ஆட்டங்கள் நேற்று இரவு 8.30 மணிக்கு நடை பெற்றது.

இதில் நெதர்லாந்து, கட்டார் அணிகள் மோதின. தொடக்கம். முதல் நெதர்லாந்து அணி சிறப்பாக ஆடியது. ஆட்டத்தின் 26வது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் கோடி காக்போ ஒரு கோல் அடித்தார். இதனால் முதல் பாதியில் நெதர்லாந்து 1-0 என முன்னிலை வகித்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் 49-வது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் பிரெங்கி டி ஜாங் ஒரு கோல் அடித்து அசத்தினார்.

இறுதியில், நெதர்லாந்து அணி 2-0 என்ற கோல் கணக்கில் கட்டாரை வென்றது. அத்துடன் புள்ளிப்பட்டியலில் முதலிடமும் பிடித்தது. கட்டார் அணி தான் ஆடிய 3 போட்டிகளிலும் தோல்வி அடைந்து கடைசி இடத்தில் உள்ளது.

## உலக கோப்பை கால்பந்து; ஈகுவடோர் வெளியேறியது

கட்டாரில் நடைபெற்று வரும் உலக கோப்பை கால்பந்து தொடரின் ஏ பிரிவில் இரு லீக் ஆட்டங்கள் நேற்று இரவு 8.30 மணிக்கு நடைபெற்றது. இதில் ஈகுவடோர், செனகல்அணிகள்மோதின.

தொடக்கம் முதல் செனகல் அணி சிறப்பாக ஆடியது . ஆட்டத்தின் 44-வது நிமிடத்தில் செனகல் அணியின் இஸ்மைலா சர் பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றினார். இதனால் முதல் பர்தியில் செனகல் 1-0 என முன்னிலை வகித்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் 67-வது நிமிடத்தில் ஈகுவடோர் அணியின் மொய்சஸ் கைசெடொ ஒரு கோல் அடித்து சமனிலைக்கு கொண்டு வந்தார். இதற்கு பதிலடியாக செனகல் அணியின் கலிடோ கவுலிபலி 70-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இறுதியில், செனகல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஈகுவடோரை வீழ்த்தியது.

இந்த தோல்வியின் மூலம் ஈகுவ டோர் அணி உலக கோப்பை தொடரில் இருந்து வெளியேறியது.


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of DPM & HDU | 500.00 | 68,000.00 | 91 | 3.4 | C8 |
| 2. | Construction of Staircase for near foodcity upper floor | 500.00 | 50,000.00 | 91 | 2.4 | C8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB. Jaffna during office hours, if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 01.12.2022 up to 15.12.2022 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 16.12.2022, late bids will be rejected. Bids will be open at Director's office, Teaching Hospital, Jaffna Soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

29.11.2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக நீண்ட மின்வெட்டை நாடு சந்திக்க நேரிடும்

## மின்சார சபை எச்சரிக்கை

(கொழும்பு)

**வரலாற்றில் மிக நீண்ட மின்வெட்டை நாடு சந்திக்க நேரிடும் என இலங்கை மின்சார சபையின் சுயாதீன பொறியியலாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் போதுமான நிலக்கரி கையிருப்பு கிடைக்கா விட்டால் இந்த நிலை ஏற் படுமென அந்தச் சங்கம் தெரி வித்துள்ளது. அவ்வாறு குறி த்த காலப்பகுதிக்குள் தேவை யான நிலக்கரி கிடைக்கா விட்டால், ஜுலை, ஒகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங் களில் பாரிய மின்வெட்டு ஏற்படும் என சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன தெரிவித்துள்ளார். (நி)


## துயர் பகிர்கின்றோம்

பிறப்பு: 1935.12.09
இறப்பு: 2022.11.28



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி. சந்திரகலா புவனேந்திரா அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.
**அபிராமிப்பிள்ளை சங்கரப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(13623)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் **சிற்றம்பலம் யோகேஸ்வரன்** அவர்களின் தந்தை

பிறப்பு-06.08.1946
இறப்பு-28.11.2022



**அமரர். முருகன் சிற்றம்பலம்**

அவர்களின் பிரிவினால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13620)

கல்விசாரா ஊழியர்கள்,
யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்.


### தெய்வீகத் திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்னெடுக்கும் தெய்வீக திருக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இந்து சமய. கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் தலைமையில் நடை பெறவுள்ளது. (நி)

### மீண்டும் அதிகரிக்கும் கொவிட் தொற்று

(கொழும்பு)

நாட்டில் கொவிட் தொற்று பரவுகை மீண்டும் அதிகரித் துள்ளது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார். மீண் டும் கொவிட் தொற்று பரவுகை அதிகரிக்கத் தொடங்கியுள்ள கார ணத்தினால் மக்கள் சுகாதார பழக்கவழ க்கங்களை தொடர் ந்தும் பின்பற்றுமாறு அவர் அறிவுறுத்தியு ள்ளார். (நி)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 06 ❖ 11 ❖ 1952



ஆண்டவன் அடியில் 30 ❖ 11 ❖ 2017

**அமரர். தம்பன் ஐயாத்துரை**

திதி:கார்த்திகை மாதம் பூர்வபக்க ஏகாதசி

ஐந்து ஆண்டுகள் மறைந்திருந்தாலும் உன் நினைவுகள் எம் உள்ளத்திலிருந்து அழியாது இறைவனை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காந்தி வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(13604)

தகவல்:
மகன் ஐ.ரஜனிகாந்தன்
(C.T.B)
குடும்பத்தினர்.


## இராசிபலன்

30.11.2022
கார்த்திகை 14, புதன்கிழமை
சப்தமி பிற்பகல் 2.01 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 12.20 மணிவரை
சுபநேரம் -04.44-06.14 மணிவரை
இராகுகாலம் - 12.14-1.44 மணிவரை

வளவன்



மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்துச் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.



துலாம்

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.



மகரம்

அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வரலாம், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.



ரிஷபம்

சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், போசன சுகமுண்டு



சிம்மம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



விருச்சிகம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.



கும்பம்

சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு



மிதுனம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.



கன்னி

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள்.



தனுசு

நேற்றைய பிரச்சினைகள் இன்று நல்ல முடிவுக்கு வரும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பாகப் பரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும்.



மீனம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

துணிச்சல் உடையவர்களே உயர்நிலை அடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் ஒளிப்படங்கள் மீட்பு

# மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர், செயலாளர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு எதிராக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கினை சட்டமா அதிபர் கைவாங்கியதை அடுத்து அவர்கள் இருவரும் நேற்று வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அறையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மாவீரர்களின் ஒளிப்படங்கள் மற்றும்தமிழீழவரைபடம்என்பன கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம். திவாகரன், செயலாளர் எஸ். கபில்ராஜ் ஆகிய இருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதனை அடுத்து அவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு, யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கு தவணைகளின் விசாரணைகளின் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிராக கொழும்பு



மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

அந்நிலையில் குறித்த வழக்கினை சட்டமா அதிபர் கைவாங்கியதை அடுத்து அவர்கள் இருவரும் நேற்று செவ்வாய்க் கிழமை வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டனர். (4-6-33)

# வீதியை புனரமைக்கக் கோரி வீதி மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

786 மற்றும் 782 பேருந்து வழித்தட வீதிகளைப் புனரமைக்குமாறு கோரி மக்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.



காரைநகருக்குச் செல்லும் குறித்த இரண்டு பிரதான வீதிகளும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அந்த வீதிகளை திருத்தம் செய்து தருமாறு கோரி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் போக்குவரத்துகள் முடங்கின. இந்த போராட்டத்தில் வலி.மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர், வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். போராட்டத்தின் முடிவில் வடக்குமாகாண ஆளுநர், யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கு முகவரி யிடப்பட்ட கடிதங்கள் வலி.மேற்கு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இதன் பிரதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.(4-6-33-104)

# பாவனைக்கு உதவாத புளியை வைத்திருந்தவருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

பாவனைக்கு உதவாத புளியை மீள் பொதி செய்த குற்றச்சாட்டில் கைதானவருக்கு சுமார் ஒரு மாத காலத்திற்கு பின்னர் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்று பிணை வழங்கியுள்ளது.

யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் யாழ். நகர் பகுதியை அண்மித்த பகுதியில் இருந்த களஞ்சியசாலையை சோதனையிட்ட போது, மனித பாவனைக்கு உதவாத 6 ஆயிரம் கிலோ நிறையுடைய புளியை மீள் பொதி செய்து கொண்டிருந்த போது அவை மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட புளியையும் அவற்றின் உரிமையாளரையும் கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொதுச் சுகாதார பரிசோதகர் முற்படுத்தி இருந்தார்.

அதனை அடுத்து 6 ஆயிரம் கிலோ புளியையும் அழிக்க உத்தரவிட்ட மன்று அதன் உரிமையாளரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கு தவணைக்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போது, புளியின் உரிமையாளருக்கு பிணை வழங்கப்பட்டது. (4-6-33)

## சர்வதேச ரோட்டரிக் கழகங்களின் தலைவர் இலங்கை விஜயம்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச ரோட்டரிக் கழகங்களுடைய தலைவர் ஜெனிபர் ஜோன்ஸ் எதிர்வரும் 14 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கையில் உள்ள சகல ரோட்டரிக்கழக அங்கத்தவர்களையும் சந்திக்கவுள்ளார்.

ஜெனிபர் ஜோன்ஸ் சர்வதேச ரோட்டரிக் கழகங்களுடைய முதலாவது பெண் தலைவி என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-30)

## க.பொ.த.சா/தரப் பரீட்சைப் பெறுபேறுகள்-2021

**பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலை**

எஸ்.சன்சிகா-9ஏ, எஸ்.றோசியா-9ஏ, ஆர்.சாகித்தியா-9ஏ, எஸ்-தர்ஷி-9ஏ, உ.கீர்த்தனி-9ஏ, ரி.ராகவி-9ஏ, கே.கர்ஷனா-9ஏ, வி. ஹரணிகா-9ஏ, ரி-சியாமலி-9ஏ, எஸ்-துஷானி-9ஏ, ஆர். ஆரணி-9ஏ, யே.ஆர்தர்ஷா-9ஏ, எஸ்.டெறிகா-9ஏ, வி.கஜந்தனா-9ஏ, கே.கோபிகா-9ஏ, எஸ்-மாதுரி-9ஏ, பி.நதிநயா-9ஏ, வி.சயந்தனா-9ஏ, ஐ.சங்கரி-9ஏ, வை.சுபசங்கவி-9ஏ, யே.மதுசலா-9ஏ,

ரி.அர்ச்சயா-8ஏபி, எம்.கோபிகா-8ஏபி, ரி.கம்சாயினி-8ஏபி, ஏ.அபர்ணா-8ஏபி, எம்.ஆரணி-8ஏபி, யே.ஜெரிகா-8ஏபி, என். நிவேதா-8ஏபி, என்.பூர்விகா-8ஏபி, எஸ்.துளசிகா-8ஏபி, வி.அபிநயா-8ஏபி, ரி.ரஜிகா-8ஏபி, எஸ்.அர்ச்சனா-8ஏபி, என்.அருண்யா-8ஏபி, கே.கம்சாயினி-8ஏபி, யே.லவீனா-8ஏபி, வி.நந்திதா-8ஏபி, எஸ்.சுவேதா -8ஏபி, கே.சுரேகா-8ஏபி,

கே.சேதுசாருகா-8ஏசி, வி.ரோஜிகா-8ஏசி, எஸ்.சாருகா-8ஏசி, யு.நம்றிதா -8ஏசி, ஆர்.சுஜனி -8ஏசி, கே.சமிதா-8ஏசி, எஸ். விதுஷா- 8ஏசி, எஸ்.பவித்ரா-8ஏஎஸ்,

ஆர்.சந்தியா-7ஏ2பி, எம்.ஆரணிகா-7ஏ2பி, எம்.கிறிஸ்ரிலினா- 7ஏ2பி, எஸ்.மாதுரி-7ஏ2பி, பி.மதுசா-7ஏ2பி, பி.சந்தியா-7ஏ2பி, எஸ்.அபிநயா-7ஏ2பி, ரி.அபிநயா-7ஏ2பி, எஸ்.சாருகா-7ஏ2பி, எஸ்.சஜனிகா -7ஏபிசி, யே.ஜென்சிகா -7ஏபிசி, எஸ்.தனுசிகா -7ஏபிசி, எம்.டிலானி -7ஏபிஎஸ்,

பி.கெனுஜா-6ஏ3பி, எஸ்.கிருஸ்ணவேணி-6ஏ3பி, வி.வைஸ்மினி-6ஏ2பிசி, எம்.மகிந்தா-6ஏ2பிசி, ஏ.நிரஞ்சினி-6ஏ2பிசி, கே.விதுர்சிகா-6ஏ2பிசி, கே.சஹானா-6ஏ2பிசி, ரி.டயானி-6ஏபி2சி, ஆர்.மதுஷா -6ஏபிசிஎஸ், வி.தருண்ஜா-6ஏ3சி. (4-6)

# மோட்டர்கள் திருட்டு 3 இளைஞர்கள் கைது

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈவினை பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் இருந்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் இரண்டு மோட்டர்கள் களவாடப்பட்டிருந்தன.

இச்சம்பவம் குறித்து பண்ணையின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். குறித்த முறைப்பாடானது சுன்னாகம் பொலிஸாரினால் காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவினர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் 18, 21 மற்றும் 25 வயதுடைய, ஈவினை பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களைக் கைது செய்தனர். இதன்போது களவாடப்பட்ட மோட்டர்களும் மீட்கப்பட்டுள்ளன.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மீட்கப்பட்ட மோட்டர்கள் சுமார் 4 இலட்சம் பெறுமதி உடையவை என தெரிவிக்கப்படுகிறது. (4-6-33-104)



யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் பாடசாலைக்கு அருகில் போக்குவரத்து கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கான விசேட பயிற்சியும் போக்குவரத்து காப்பாளர் அங்கி வழங்கி வைக்கும் நிகழ்வும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. (படம்:-கஜிந்தன்)

# பயிற்சி நெறிகளுக்கு ஆட்சேர்க்க விண்ணப்பங்கள் கோரல்

(சாவகச்சேரி)

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் எதிர்வரும் தை மாதம் தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.

மனைப் பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறியும் அதனுடன் இணைந்த ஆடை வடிவமைப்பிற்கான தொழில் தகைமை சான்றிதழ் கற்கை நெறிக்குமான விண்ணப்பங்களே இவ்வாறு பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் தை முதலாம் திகதி பயிற்சி நெறிகள் ஆரம்பமாக இருப்பதனால் ஆர்வமுள்ள கா.பொ.த. சாதாரணதரம் வரை பயின்ற 18-35 வயதிற்கு இடைப்பட்டவர்கள் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்திய படிவங்களை ஒப்படைக்குமாறு பிரதேச செயலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகள்

## மீண்டும் அறிமுகப்படுத்த தயார் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)


**மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை மீண்டும் அறிமுகப்படுத்தத் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைக்க முன்மொழிந்தபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த ரணில், "முன்னாள் ஜனாதிபதி, மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தொடர்பான உங்கள் கருத்துக்களை நான் செவிமடுத்தேன்.

அதனைச் செய்வதற்கு நான் தயாராக உள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இது நல்லதென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள நாம் இதற்கு முழுமையாக ஆதரவளிப்போம் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலளித்துள்ளார். (நி)



# இனவாதம் இல்லாத கொள்கை வகுக்கப்பட்டால் இலங்கையை சர்வதேசம் அங்கீகரிக்கும்

(கொழும்பு)

அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கும் கொள்கை வகுக்கப்பட்டால் சர்வதேசம் இலங்கையை முழுமையாக அங்கிகரிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ச்சியாக கருத்து வெளியிட்ட அவர், 'இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் என்றுமில்லாத வகையில் தற்போது சர்வதேச மட்டத்தில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண யுத்தக் குற்றச்சாட்டு களுக்கு மத்தியில் தற்போது பொருளாதார குற்றச்சாட்டும் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் கடந்த செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற 57 ஆவது கூட்டத்தொடரின் போது 7 நாடுகள் மாத்திரம் தான் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன.

இதேவேளை தமது வாக்கு வாங்கியை பாதுகாத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஆட்சி செலுத்தி இனவாதத்தின் ஊடாக அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள அரசாங்கம் சமூகத்தின் மத்தியில் அருவருக்கத்தக்க பேச்சுக்களை பிரயோகித்தது.

இறுதியில் முழு நாடும் பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டு, நாட்டு தலைவர் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.

இனவாதம் இல்லாத கொள்கையை செயற்படுத்தினால் சர்வதேசம் இலங்கையை முழுமையாக அங்கீகரிக்கும்' என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

# இளைஞன் மீது படையினர் தாக்குதல்

## மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாயில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இளைஞன் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் ஆலடி சந்தியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கடமையில் இருந்த வேளை இளைஞன் ஒருவர் தலைக்கவசம் அணியாது வந்தமை தொடர்பில் பொலிஸாருக்கும் இளைஞர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து, அங்கு கடமையில் இருந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இளைஞன் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்ட வேளை வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்குதல் சம்பவத்தினை அடுத்து அங்கு மக்கள் கூடியமையால் இளைஞனை கைது செய்த பொலிஸார், மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று, இரத்த காயங்களுடன் நீண்ட நேரம் தடுத்து வைத்திருந்த பின்னர் யாழ்.போதனா மருத்துவமனையில் இளைஞனை சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (4-6-33)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:47 சூரி 4 செவ் 2 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:O/L (சாரதி (கட்டார்))<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13164 | பிறப்பு: 1994 கிறிஸ்தவம் RC<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:A/L மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் மட்டும்<br>தொ.இ:G/11294 |
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா:சூரி 10 செவ் 9 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:O/L கடை பந்தல் சேவை<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13166 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 2<br>கி.பா:சூரி 01 செவ் 11 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:தகுந்த வரன்<br>தொ.இ:G/11297 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா:சூரி 10 செவ் 6 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: A/L (வியாபாரம்)<br>எதிர்பார்ப்பு:ஆசிரியர்.அரச உத்தியோகம்<br>தொ.இ: B/13167 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 3<br>கி.பா:சூரி 12 செவ் 1 இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவி<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ: G/11301 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா:13 சூரி 10 செவ் 6 இல்<br>தகைமை/தொழில்:B Tech Engineering இறக்குமதி (இலத்திரனியல்) சொந்தவேலை<br>எதிர்பார்ப்பு: A/L இற்குமேல் படித்த பெண்<br>தொ.இ: B/13169 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா:15 ¼ சூரி. செவ் 9 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: O/L (தையல்)<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/11311 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2023

**29.11.2022** நேற்றைய வலம்புரி பத்திரிகையில் 5 ஆம் பக்கத்தில் பிரசுரமான "தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2023" என்ற விளம்பர அறிவித்தலில் பாதுகாப்பு சேவை தேவைப்படும் இடம் தொடர்பான அட்டவணையில் பின்வரும் விடயத்தையும் இணைத்துக்கொள்ளவும்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | பகல் | இரவு | |
| 03 | கிளி சேவைச்சந்தை, கிளிநொச்சி | 00 | 02 | 01.01.2023 – 31.12.2023 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.**

30.11.2022

(c-5363)



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"ஆரோக்கியமான கலந்துரையாடல்களே வன்முறையற்ற வீடுகளை உருவாக்குவதற்கான திறவுகோலாகும். மௌனம் விடுத்து குடும்ப வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம்!!!"

(c-5323)

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 40





"ஆஹா! நேற்று ராத்திரி வந்தி ருந்த பணக்கார விருந்தாளிகளில் ஒருவரை மாப்பிள்ளையாக்கத் திட்டம் செய்தீர்களாக்கும்! கந்த மாறா! இதில் எனக்கு வியப்பும் இல்லை; ஏமாற்றமும் இல்லை. ஒரு மாதிரி நான் எதிர்பார்த்ததுதான்..."

"எதிர்பார்த்தாயா அது எப்படி?"

"என்னைப்போல் ஏழை அநா தைக்கு யார் பெண்ணைக் கொடுப் பார்கள்? ஊரும் வீடும் இல்லா தவனை எந்தப் பெண் மணந்து கொள்ள இணங்குவாள்? எப் போதோ என் குலத்தைச் சேர்ந்த முன்னோர்கள் அரசு செலுத்தி னார்கள் என்றால், அது இப்போது என்னத்துக்கு ஆகும்."

"நண்பா! போதும் நிறுத்து; என்னைப் பற்றியும் என் குடும்பத்தைப் பற்றி யும் அவ்வளவு கேவலப்படுத்தாதே! நீ சொல்வது ஒன்றும் காரணமில்லை. வேறு மிக முக்கியமான காரணம் இருக்கிறது. அதை அறிந்தால் நீயே ஒப்புக் கொள்வாய். ஆனால் அதை நான் இப்போது வெளிப்படுத்துவ தற்கில்லை. சமயம் வரும்போது நீயே தெரிந்து கொள்வாய்!"

"கந்தமாறா! இது என்ன ஒரே மர்மமாகவே இன்றைக்கு நீ பேசிக் கொண்டு வருகிறாயே?"

"அதற்காக என்னை மன்னித்து விடு. உன்னிடம் கூட நான் மனம் விட் டுப் பேச முடியாதபடி அப்படி ஒரு பெரிய காரியந்தான். எது எப்படியானாலும் நம்முடைய சிநேகத்துக்கு எவ்வித பங்கமும் வராது என்பதை நம்பு.

விடயம் வெளியாக வேண்டிய சமயம் வரும்போது, ஓட்டமாக ஓடி வந்து உன்னிடந்தான் முதலில் சொல்வேன். அதுவரையில் என்னி டம் நம்பிக்கை வைத்திரு. உன்னை நான் ஒருநாளும் கைவிட மாட்டேன். என்னை நம்பு!.."

"இந்த வாக்குறுதிக்காக ரொம்ப வந் தனம். ஆனால் என்னைக் கைவிடும் படியான நிலைமை என்ன என்பது தான் தெரியவில்லை! அப்படி நான் இன் னொருவரை நம்பிப் பிழைக்கிறவ னும் அல்ல, கந்தமாறா! என்னுடைய உடை வாளையும் கைவேலை யுமே நான் நம்பியிருப்பவன்!"

"அந்த உடைவாளையும் வேலை யும் உபயோகிக்க வேண்டிய சந் தர்ப்பம் சீக்கிரத்தில் வரலாம். அப் போது நாம் இருவரும் ஒரே கட்சி யில் நின்று தோளோடு தோள் சேர் ந்து போரிடுவோம்; அதனால் உன் னுடைய நோக்கமும் கைகூடும்..."

"இது என்ன? ஏதாவது யுத்தம் சீக்கிரம் வரும் என்று எதிர்பார்க் கிறாயா? அல்லது ஈழ நாட்டில் நடக்கும் யுத்தத்துக்குப் போகும் உத்தேசம் உனக்கு உண்டா?"

"ஈழத்துக்கா? ஈழத்தில் நடக்கும் அழகான யுத்தத்தைப் பற்றிக் கேட் டால் நீ ஆச்சரியப்பட்டுப் போவாய்! ஈழத் தில் உள்ள நம் வீரர்களுக்காகச் சோழ நாட்டிலிருந்து அரிசியும் மற்ற உண வுப் பொருட்களும் போக வேண்டு மாம்! வெட்கக்கேடு! நான் சொல்லு வது வேறு விடயம். கொஞ்சம் பொறு மையாயிரு. சமயம் வரும்போது சொல்லுகிறேன்; தயவு செய்து இப் போது என் வாயைப் பிடுங்காதே!"

"சரி, சரி! உனக்கு விருப்பம் இல்லை என்றால் ஒன்றும் சொல்ல வேண்டாம். வாயைக்கூடத் திறக்க வேண்டாம். அதோ கொள்ளிடமும் தெரிகிறது!" என்றான் வந்தியத் தேவன்.

உண்மையில் சற்றுத் தூரத்தில் கொள்ளிடப் பெரு நதியின் வெள்ளம் தெரிந்தது. சில நிமிட நேரத்தில் நண்பர்கள் நதிக்கரையை அடைந் தார்கள்.

ஆடிப் புதுப் பிரவாகம் அந்த மாநதி யில் கரை புரண்டு சென்றது. மறு கரை வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. மறுகரையிலேயுள்ள மரங்கள் சிறிய செடிகளைப் போலி ருந்தன.

செக்கச் சிவந்த பெரு நீர் வெள் ளம் சுழிகளும் சுழல்களுமாக, வட்ட வடிவக் கோலங்கள் போட்டுக் கொண்டு, கொம்மாளம் அடித்துக் கொண்டு, கரையை உடைக்கப் பிரயத்தனம் செய்து கொண்டு, 'ஹோ' என்று இரைந்து கொண்டு, கீழ்க் கடலை நோக்கி அடித்து மோதிக் கொண்டு விரைந்து சென்ற காட்சியை வந்தியத்தேவன் பார்த் துப் பிரமித்து நின்றான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## நாட்டு நலன் எதில்?

இருவரும் பிசாசின் ஊரை அடைந்து அதன் வீட்டிற்குச் சென்றனர். வீட்டில் எல்லோரும் உட்கார் ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார் கள். அப்போது பிசாசு தேவசர்மாவிடம் "இன்று என் பிறந்த நாள். அதைத்தான் இவர் கள் கொண்டாடுகி றார்கள் போலிருக் கிறது." என்றது.

தேவசர்மாவும் அவ் வீட்டிற்குள் போய் "இறந்து போன இந்த வீட்டுக் காரரின் பிறந்த நாளை விமரி சையாகக் கொண்டா டுகிறீர்களா?" என்று கேட்டார். அப்போது அங்கிருந்த ஒரு வித வையும் இரு மகன் களும் அவர்களது மனை விகளும் தம் பேச்சை நிறுத்திவிட்டு தேவ சர்மாவை ஆச்சரியத் துடன் பார்த்தார்கள்.

பிறகு விதவையம் மாள் "அவரது பிறந்த தினமா இன்று? அது எங்களுக்கு ஞாபகமே இல்லை. அவர் உயி ரோடு இருந்தவரை கட்டுப்பாடு என்ற பெயரில் எங்களைப் படாதபாடுபடுத்தி விட்டார். வாய்க்கு ருசியாகச் சாப்பிடவே அனுமதிக்கவில்லை. நல்ல ஆடைகளை உடுத்த விடவில்லை. இவ்வளவுக்கும் விவசா யத்திலிருந்து நிறை யப் பணம் கிடைத்துக்



கொண்டிருந்தது. ஆனால் என்ன பயன்? அவர் போனார். பழைய கட்டுப்பாடுகள் எல் லாம் இல்லை. இப் போது நாங்கள் சந் தோசமாக இருக்கி றோம்" என்றாள்.

மகன்களில் ஒருவ னும் "அவர் இறந்த பிறகுதான் இந்த வீட் டில் எல்லோர் முகத்தி லும் சிரிப்பைக் காண் கிறோம். அவரால் எப் பொழுதும் தொல் லையே. இப்போது அவ ரது மூத்த மனைவி யின் மகனால் தொல்லை. அவன் குடிகாரன். குடித்துவிட்டு தினமும் ஒரு வம்பைக் கொண்டு வருகிறான். அதை நாங்கள் தான் தீர்த்து வைக்க வேண்டி வருகிறது" என்றான்.

அவர்களது பேச் சைக் கேட்ட பிசாசு அங்கே இருக்க விரும் பாமல் தேவசர்மாவை உடனே அங்கிருந்து கிளம்பும்படி கூறி யது. தேவசர்மாவும் அந்த வீட்டை விட்டு வெளியே வந்தார்.

பிசாசு அவரிடம் "என் மூத்த மனைவி யின் மகன் கஷ்டப்ப டுகிறான் போலிருக் கிறது. அவனைப் பார் க்கலாம்" என்றது.

தேவசர்மா அவ னைப் பற்றி சிலரிடம் விசாரிக்கவே அவ ர்கள் அவனா? பெரிய குடிகாரனாயிற்றே. அவனுக்கு வீடு வாசல் என்று ஒன்று இருக் கிறதா என்ன? அந்தப் பனந்தோப்பில் குடித் துவிட்டுப் படுத்துக் கிடப்பான்-" என்று கூறினார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை நேசி; பிழையை மன்னித்து விடு.
– வால்ட்டேர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வில்வமரத்தை விரும்புகின்ற ஈழத்துச் சிதம்பரத்தான்

அது ஒரு தெய்வீகமான காட்சி. முப்பத்து முக்கோடி தேவர்கள் சகிதம் சிவதாண்டவம் ஆடியவாறு கூத்தபிரான் வந்து கொண்டிருக்கிறார்.

கடலை ஊடறுத்த வீதிபோல அவ்விடம் காட்சி தருகிறது. கூடவே வீதியில் ஒருபெரும் வளைவு.

வளைவில் ஆனந்த நடனமிடும் நடராஜப் பெருமான் துணையின்றித் தனித்து நிற்கிறார். தேவர்கள் புடைசூழ வருகின்ற கூத்த பிரானை கண்ணுற்ற யாம் தொழுதேத்தி பரம்பொருளே! என்று வணங்கினோம்.

அவர் எம்மைத் திரும்பிப் பார்க்கவில்லை.

சுவாமி! யாது பிழை செய்தோம். எம்மைக் கண்டு கொள்ளாததன் காரணம் யாதோ என்றோம்.

சிவன் கோபாவேசத்துடன் எம்மை முறைத்துப் பார்த்தார். அவரின் திருக்கை ஏந்திய அனல் பற்றி எரிகிறது. உடுக்கு கடும் ஒலி தருகிறது. ருத்திரதாண்டவம் நடக்கிறது.

காரணம் புரியாமல் கலங்கினோம். நம சிவாயப் பெருமானே! கோபம் தணிக என்று அட்டாங்கமாய் நிலத்திடை வீழ்ந்து வணங்கினோம்.

திண்ணபுரத்தான் கங்கையில் நனைந்து வெப்பம் தணிந்து விளக்கம் தந்தான்.

சிவபூமி என்ற ஈழம் இக்கதிடக் காரணம் தெரியுமா? உனக்கு என்றார்.

புரியவில்லை சுவாமி என்றேன்.

ஈழத்தில் எனதும் எனது பரிவாரங்களும் வீற்றிருக்கும் கோயில்கள் மீது வழக்கு நடக்கிறது.

நானா? நீயா? என்று என் சந்நிதானத்தில் சண்டை போடுகிறார்கள்.

சிலவேளையில் திருவிழாக்கள் இடம் பெறாமல் தடுக்கப்படுகிறது.

கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்ற முக்கிய திருவிழாக்களில் உபயப் பிரச்சினை. அதற்கும் வழக்கு. வழக்கு முடியும்வரை நிபந்தனைகளுடன் எனக்குத் திருவிழா நடக்கிற நிலைமை.

இதோ பார்! மணிவாசகர் மடாலயத்தை பூட்டிவைத்தார்கள். பூசகரைக் கேட்டபோது மன்றிட்ட கட்டளை என்றார். அப்போ யான்? என்று கேட்டேன்.

எல்லாம் பகட்டு என்ற பதிலோடு அவர் மௌனமானார். சரி பொறுத்துக் கொண்டேன். ஆனால் இன்னமும் என்னை நிம்மதியாக விடுவதில்லை என்று ஈழத்துச் சிதம்பரத்தில் இரு தரப்பு நிற்கிறது.

இனி வேண்டாம் என்று வெளிக்கிட்டு விட்டேன்.

என்னில் நம்பிக்கையில்லாமல் எனக்குக் கோயில். என்னில் நம்பிக்கையில்லாமல் எனக்கு இராஜகோபுரம். என்னில் நம்பிக்கையில்லாமல் எனக்குத் திருவிழா:

ஓ! பணம் புளுத்ததால் வந்த வினை இது.

நீங்கள் நீயா? நானா? நிகழ்ச்சி வைக்க திண்ணபுரமோ உங்கள் களம்.

வெளிக்கிட்டு ஒரு வில்வமரத்தின் கீழ் இருந்தால் அது நிம்மதி.

விரும்பினால் வந்து வணங்கு. சாந்தத்தோடு பதிலளித்த பார்வதிநாதன், படார் என உடுக்கடிக்க திணுக்குற்று விழுந்த நான் கண்டது கனவென்றறிந்தேன்.

# மகன் போதைக்கு அடிமை விபரீத முடிவெடுத்த தாய் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

உயர்தரத்தில் சிறப்பு தேர்ச்சி பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்று வந்த 22 வயதான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில் தாயார் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. இச் சம்பவம் கொழும்பு- வெள்ளவத்தைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வெளிநாட்டிலுள்ள தங்கையின் வீட்டில் தனது இன்னொரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்றுவரும் நண்பருடன் தங்கியிருந்து குறித்த மாணவன் கற்று வந்துள்ளார்.

இந் நிலையில் கடந்த இரு மாதங்களாக மாணவன் யாழில் உள்ள தனது பெற்றோர் மற்றும் உறவுகளுடன் தொடர்பு கொள்வதைக் குறைத்து வந்துள்ளார். மாணவனுக்கு தொலைபேசி ஊடாக தொடர்பு எடுக்கும் போது மாணவனின் நண்பனே பல தடவைகள் தொலைபேசியில் பதிலளித்துள்ளார். அத்துடன் மாணவன் பல நாட்கள் பல்கலைக்கழக வகுப்புக்குச் செல்லவில்லை என வேறு நண்பர்கள் மூலம் தகவல் அறிந்த நிலையில், தாயார் கடந்த வாரம் கொழும்பு சென்றுள்ளார்.

அங்கு சென்ற பின்னரே தனது மகன் கொடிய ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையான விடயம் தெரிந்துள்ளது. மனநலம் குன்றியது போல் அறை மூலையில் தனித்திருந்த மாணவன் தனது பெற்றோர் வந்திருப்பதைக் கூட அறியாத நிலையில் இருந்துள்ளார்.

இதனையடுத்து உடனடியாக அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதே மாணவன் போதைப் பொருளுக்கு அடிமையான விடயம் அறியவந்துள்ளது. மாணவனுடன் கூட இருந்த மாணவனின் நண்பனிடம் இது தொடர்பாக பெற்றோர் வினவியபோது, யாழில் உள்ள காதலி தன்னை ஏமாற்றி விட்டதாகவும் ஆகவே இது தொடர்பாக தன்னை தொந்தரவு செய்ய வேண்டாம் என கூறி அறையை பூட்டியபடி இருப்பதால் தான் அவனது நடவடிக்கையை கண்டு கொள்ளவில்லை எனவும் நண்பன் பதிலளித்துள்ளார்.

இரு நாட்களாக வைத்தியசாலையில் வைத்து மகனுடன் மல்லுக்கட்டிய நிலையில் மகனை போதை சீர்திருத்த பிரிவில் சேர்க்கும்படி கூறிய வைத்தியசாலை அவரை வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றியுள்ளது.

இதனையடுத்து குறித்த மாணவனின் தாயார் கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலைக்கு முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அண்மைக்காலமாக யாழில் மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகிவரும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், நம் சந்ததியின் எதிர்காலம் என்னவாகுமோ என சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-7)

## 15 வயது மகள் துஷ்பிரயோகம் தந்தைக்கு 45 வருட கடூழிய சிறை

(பொலனறுவை)

பொலனறுவை - நிஸ்ஸங்கமல்லபுர பகுதியில் தமது 15 வயது மகளை, துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றத்துக்காக, அவரது 45 வயதுடைய தந்தைக்கு 45 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து பொலனறுவை மேல்நீதிமன்றம், தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், 10 இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தாய் இல்லாத நிலையில், தமது பாதுகாப்பில் இருந்த மகளை குறித்த தந்தை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கர்ப்பிணியாக்கிய சம்பவம் 2015 ஆம் ஆண்டு இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணையின் போது பொலனறுவை மேல்நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ம-7)

### முல்லை – புதுக்குடியிருப்பில்
## திருடர்கள் ஐவர் மடக்கி பிடிக்கப்பட்டு நையப்புடைப்பு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மந்திகை பகுதியில் திருடர்கள் ஐவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணி அளவில் திருடுவதற்காக இவர்கள் வருகை தந்து வீடு ஒன்றினை உடைக்க முற்பட்டபோது அந்த வீட்டுக்காரர்கள் சத்தமிட்டதைத் தொடர்ந்து அவ்விடத்தில் ஒன்று கூடிய அப்பகுதி மக்கள் மற்றும் இளைஞர்களால் மூன்று பேர் பிடிக்கப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து இரண்டு பேர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

“அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பவை மரங்களே!”

–கௌதம புத்தர்–

### எதிர்வரும் 12 ஆம் திகதி வரை
## கைதான 24 இந்திய மீனவர்களுக்கும் மறியல்

சட்டவிரோதமான முறையில்எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 24 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு சட்டவிரோதமாக நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்களின் ஐந்து படகுகளை மடக்கி பிடித்த கடற்படையினர் படகில் இருந்த 24 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் நீரியல் வளத்துறையினரால் , ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை 24 மீனவர்களும் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில்நீதவான் உத்தரவிட்டார். (ம-7,33)

### இணையத்தளம் ஊடாக
## வங்கிக் கணக்கிலிருந்து ஒரு கோடி ரூபா கொள்ளை

(கொழும்பு)

தனியார் வங்கியொன்றிலுள்ள, இரண்டு கணக்கிற்குள், இணையத்தளம் ஊடாக சட்டவிரோதமாக ஊடுருவி, ஒரு கோடியே 37 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின், நிதி மற்றும் வணிகக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, வாத்துவ, பிலியந்தலை, பண்டாரவளை மற்றும் காலி ஆகிய பிரதேசங்களில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 22 - 36 வயதுக்கு இடைப்பட்ட, க்காலி, வெலிகம, ரத்கம, வாத்துவ மற்றும் புட்டியகெத்ர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் நாளை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி மீது தாக்குதல்

# வடமாகாண இ.போ.ச சாலை பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண சாலை பணியாளர்கள் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்து வடமாகாணத்தில் உள்ள ஏழு சாலை பணியாளர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்**



யாழ்ப்பாணம் வயாவிளான் பகுதியில் கடந்த புதன்கிழமை இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து மோதியதில் மாணவன் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து சம்பவத்தின் போது, இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாரதி மீது அங்கிருந்த சிலர் தாக்குதலை மேற்கொண்டு இருந்தனர். அதில் காயமடைந்த சாரதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாரதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏனைய தாக்குதலாளிகளையும் பொலிஸார் கைது செய்ய வேண்டும் எனவும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என கோரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை, யாழ்ப்பாண சாலை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் போது, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தினுள் பேருந்துகளை நுழைய விடாது தடுப்புக்களை போட்டுள்ளனர். அதனால் வெளி மாவட்ட பேருந்துகள், பேருந்து நிலையத்தினுள் நுழைய முடியாததால், வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன.

இந்நிலையில் யாழ்ப்பாண சாலை பணியாளர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக வடமாகாணத்தில் உள்ள ஏழு சாலைகளும் நேற்று செவ்வாய்க்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பின்னர் தொழிற் சங்கங்களுடன் பொலிஸ் உயர் அதிகாரிகள் பேச்சு நடத்தி தாக்குதலாளிகளை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்போம் என உறுதி வழங்கியதை அடுத்து மதியம் 2 மணி முதல், தமது போராட்டத்தை கைவிடுவதாக தொழிற் சங்கங்கள் அறிவித்தன. (4-6-33-285-299)



வேலணை மத்தியஸ்தர் சபையின் உறுப்பினரான மகேஸ்வரநாதன் கிருசன் இலங்கை நீதி அமைச்சால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் உறுதிப் பிரமாணம் செய்து கொண்டார்.

# 40 கிலோ கஞ்சா சுண்டிக்குளத்தில் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுண்டிக்குளம் காட்டுப்பகுதியில் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் இராணுவ புலனாய்வு பிரிவினர் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சோதனையின் போது இது மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 40 கிலோ மதிக்கத்தக்க 20 பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ள விசேட அதிரடிப் படையினர், தருமபுரம் பொலிஸாரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-100-310)

# எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

(கரணவாய்)

இந்து கலாசார அலுவலகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடைமுறைப்படுத்தும் "எழுத்தாளர் ஊக்குவிப்பு வட்டம்" ஒன்றினை உருவாக்கும் நோக்கில் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வரும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களை இன்று புதன் கிழமைக்கு முன்னர் பூரணப்படுத்தி விண்ணப்பப் படிவங்களை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ அறிவித்துள்ளார். (4-6-60)

# திருமறைக் கலாமன்ற தினம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பணியில் 57 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முன்னெடுக்கப்படவுள்ள திருமறைக் கலாமன்ற தினம் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இல. 17, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞான சுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடு நிகழ்வோடு ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு இல.238, பிரதான வீதியாழில் உள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்.பெட்டகம்-நிழலுரு கலைக்கூடம் இயக்குநர் மா.அருள்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# 'இரவின் அந்நியர்கள்' நாடக ஆற்றுகை

(கிளிநொச்சி)

கொழும்பு Mind adventures அரங்கு மற்றும் செம்முகம் ஆற்றுகைக் குழு இணைத்து "இரவின் அந்நியர்கள்" எனும் நாடக ஆற்றுகையை மும்மொழியிலும் நிகழ்த்தவுள்ளது குறித்த நிகழ்வு நாளை 1 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கிளிநொச்சி சமாதான காட்சியகத்தில் நடைபெற உள்ளது. (4-6)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 280 | 240 |
| உருளைக்கிழங்கு | 280 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 180 | 200 |
| தக்காளி | 300 | 250 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 280 | 300 |
| கரட் | 300 | 450 | 450 | 500 |
| பூசணி | 100 | 140 | 120 | 150 |
| புடோல் | 250 | 250 | 180 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 600 | 650 | 550 | 800 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 100 | 100 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 130 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 380 | 350 | 450 | 500 |
| பீற்றூட் | 400 | 300 | 450 | 480 |
| கறிமிளகாய் | 700 | 800 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 | 800 |
| போஞ்சி | 300 | 400 | 380 | 360 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 200 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | - | -- | 400 | 500 |
| முள்ளங்கி | 120 | 150 | 160 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 45 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை விட்டு...

வன் ஒருவருக்கு இலங்கை அரசாங்கம் அறுபது இலட்சம் ரூபாய் செலவழிப்பதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு பயிற்சி பெற்று வெளிநாடுகளுக்கு செல்லும்போது அந்த நாடுகள் எமக்கு வழங்கும் உதவிகளை விட அந்த நாடுகளுக்கு நாம் செய்யும் உதவிகளே அதிகம் என தெரிவித்தார்.

எனவே எவ்வாறான அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் இந்த பிரச்சினை பாதிக்கும் எனவும் இந்த பிரச்சினைக்கான தீர்வை நாம் காண வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7)

## மண்ணெண்ணெ...

யாழ்ப்பாணத்தில் சுமார் 4 மாதங்களுக்குப் பின்னர் மக்கள் எரிபொருளை பெறுவதற்கு வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிந்தது.

நாடு முழுவதும் சுழற்சி முறையில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெய்யை பெற்றுக்கொண்டனர்.

மேலும் அனைத்து விவசாயப் பகுதிகளுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7,104)

## சிரமப்பட்ட...

செல்வகுமார் ஜீவிதா என்ற குழந்தையே உயிரிழந்ததாகும்.

நேற்று செவ்வாய்க்கிழமை குழந்தை மூச்சு விடுவதற்கு கஷ்டப்பட்ட நிலையில் முற்பகல் 11.00 மணியளவில் வலந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் 1.00 மணியளவில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு 1.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணை மேற்கொண்டு பிரேத சோதனைக்கு உத்தரவிட்டார். பிரேத சோதனையில் மூச்சு விடுவதற்கு கஷ்டப்பட்டு இறப்பு நிகழ்ந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## வடக்கு, கிழக்கில்...

அதற்கமைய, சுமார் 302 தமிழர்கள் வியட்நாமிற்கும் ஏழு பேர் உக்ரைனுக்கும் தப்பிச் சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வியட்நாமில் உள்ளவர்களில் 85 பேர் திரும்பி வர ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர்கள் திரும்புவதற்கு அமைச்சு வசதிகளை செய்யும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்த அமைச்சர், அகதி அந்தஸ்து கோருவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்தும் மனித கடத்தலில் சிக்காமல் இருப்பது குறித்தும் வடக்கு, கிழக்கில் உள்ள மக்களுக்கு அறிவூட்டுவதற்கு ஒரு விளம்பரப் பொறிமுறை தேவை என தெரிவித்தார்.

அவர்கள் அகதி அந்தஸ்தில் அல்லது தவறான கடவுச்சீட்டில் சென்று கடத்தலில் சிக்கினால் அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்று அவர்களுக்கு தெரிவிக்க விரும்புவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (ம-7)

## மருந்து இறக்கு...

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நாட்டிற்கு கொண்டு வரப்படும் மருந்துகள் ஆரம்பத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட போதிலும், மாதிரி பரிசோத்னைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக ஒரு மருந்துக்கு அங்கீகாரம் வழங்கப்படுவதுடன், தரமற்ற மருந்து வகைகளை இறக்குமதி செய்யக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்மூலம் மருந்துக் கொள்வனவு மோசடிக் கும்பலின் பிடியில் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செலவுத் தலைப்புகள் மீதான வரவு-செலவுத் திட்ட குழு விவாதத்தின் போதே பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-7)

## புலிகளை தமிழர்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிப் பயங்கரவாதிகளை நினைவு கூருவது பாவம், அவர்கள் கொலைகாரர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மீண்டும் சர்ச்சை கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேலும் யுத்தத்தில் உயிரிழந்தவர்களைத் தமிழ் மக்கள் தமது வீடுகளுக்குள் இருந்தவாறு நினைவு கூர்ந்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் மனித உரிமைகளுக்கு எதிராகவே செயற்பட்டார்கள் என்றும் அவர்களையே தமிழர்கள் நினைவுகூருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையை பாதுகாக்கும் வகையில் அமுல்படுத்தப்பட்ட பௌத்த சாசனம் பாதுகாக்கப்பட்டால் தான் நாடு பாதுகாப்பாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமஷ்டி முறைமையின் கீழ் நாட்டை பிளவுப்படுத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் புத்தசாசனம் பற்றி குறிப்பிட வேண்டிய தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் தற்போதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புத்தசாசனத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது என சரத் வீரசேகர தெரிவித்தார். (ம-7)

## உள்ளூ...

தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள அச்சம் என்னவென்பது தெளிவாகப் புரிகின்றது.

அரசாங்கமானது தேர்தலை நடத்துவதற்கு பாரியளவில் அச்சம் கொண்டுள்ளது. சமூகத்தில் அதிருப்தி நிலைமையே காணப்படுவதை அரசாங்கத்திலுள்ள தரப்பினர் நன்கு அறிவர்.

மக்கள் புறக்கணிக்கின்றனர் என்பதையும் அரசாங்கம் நன்கு அறியும். நாட்டில் அரசாங்கத்துக்கு கிடைக்கும் ஒத்துழைப்பு என்பது 10 சதவீத்துக்கும் குறைவானதாகும்.

தொழில் நுட்ப தகவலுக்கு அமைவாக இந்த விபரமானது நன்கு தெளிவாக தெரிகின்றது என்றார். (ம-7)

## அலி...

வியை கோரிய வேளை, சீனா அதனை மதித்ததென்றும் நிதியை பெற்றுக்கொள்ளுமாறு அழுத்தங்களை கொடுக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

சீனா இலங்கைக்கு சில நிதி உதவிகளையும் வழங்கியது கடன் உதவிகளையும் மனிதாபிமான உதவிகளையும் வழங்கியது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்தோடு, கடன்பொறி என்பது மேற்குலக வார்த்தைப் பிரயோகம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்து சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாவோ லிஜான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில், இலங்கை வெளிவிவகார அமைச்சரின் கருத்தை வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சீனாவின் கடன்பொறி என பயன்படுத்தப்படும் சொல்லாடலை வலுவாக நிராகரிக்கும் கருத்து இதுவாகும் என்றும் இலங்கைக்கான சீனாவின் உதவிகள் ஒருபோதும் அரசியல் நிபந்தனைகளை கொண்டிருக்கவில்லை என்பதை வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் முதலீடு மற்றும் நிதி உதவி தொடர்பான விடயங்களில் தாங்கள் எப்போதும் சுயநலத்துடன் செயற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/11/29
சீட்டிழுப்பு இலக்கம் 4954
M 2 8 9 9 5 5
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.11.29
சீட்டிழுப்பு இலக்கம் 263
மகரம் 21 43 57 59 மகரம்

மெகா பவர்
திகதி 29/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1302
N 04 02 44 46 73

கொவிசெத
திகதி 2022.11.29
சீட்டிழுப்பு இலக்கம் 3196
D 39 42 44 68
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.11.29
சீட்டிழுப்பு இலக்கம் - 984
N 06 13 18 51
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1409
கன்னி 7 8 1 6 2 7
தேசிய லொத்தர் சபை

அத விசேட கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1755
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.11.29
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 34,186,280/-
07 16 48 63 I
13837 88799

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.11.29
சீட்டிழுப்பு இல: 4090
வர்ணம்: இள நீலம்
ரூ. 4,322,900/-
04 20 44 59 S

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,272,112/-
46 52 53 55 மேஷம்
திகதி 2022-11-29
வெற்றி வாரம் 3641
வர்ணம் சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,181,380/-

28
O 35 06 62 69 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 281,486,537.80
1105
2022.11.29 செவ்வாய்க்கிழமை
011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1929 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.11.29 தினம் செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,592,440/-
G 02 34 41 64
7246 303

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 255
சீட்டிழுப்பு திகதி 2022.11.29
செவ்வாய்க்கிழமை
05 20 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,346,380/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வினை வழங்க ஆளும் கட்சி இணங்குமா?

## ஜனாதிபதியிடம் நளின் பண்டார கேள்வி



(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ளவாறு அதிகாரப் பகிர்வுக்கு எதிர்க்கட்சி தயாராகவே உள்ளது. இருப்பினும் நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்வதற்கு நாட்டில் இருக்கும் இனப்பிரச்சினை மற்றும் அதிகார பகிர்வு என்பவற்றை நடைமுறைப் படுத்த பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து கட்சிகளையும் பேச்சுவார்த்தைக்காக அழைப்பு விடுத்த ஜனாதிபதி முதலில் ஆளுங்கட்சி அதிகாரப் பகிர்வுக்கு ஒத்துழைக்குமா? என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின்போது தான் முன்னின்று அதிகாரப் பகிர்வினை நடைமுறைப் படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அன்று பாராளுமன்றத்தில் எதிரணியின் பக்கம் விரலை சுட்டிக்காட்டி அதிகாரப் பகிர்வுக்கு தயாரா? என்று கேள்வி எழுப்பியிருந்தார். எப்போதும் அதிகாரப் பகிர்வுக்கு எதிர்க்கட்சி தயாராகவே இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இருப்பினும் அன்று எதிர்கட்சியைப் பார்த்து கேள்வி எழுப்பிய ஜனாதிபதி தனக்கு பின்னால் இருப்பவர்களை பார்த்து இந்தக் கேள்வியை கேட்பதற்கு மறந்து விட்டார். நாம் எப்பொழுதும் பொறுப்புடனே செயற்படுகிறோம். எதிர்க்கட்சி என்ற வகையில் அரசியல் வரப்பிரசாதங்களுக்காக எமது கொள்கைகளை காட்டிக் கொடுக்க மாட்டோம்.

ஜனாதிபதி ரணில் தன்னை பாதுகாக்கும் தரப்பினரிடம் முதலில் அதிகாரப் பகிர்வுக்கு இணங்குவார்களா? என்பதை கேட்க வேண்டும்.

13ஆவது அரசியலமைப்பினை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்று கூறிய வர்கள் ஜனாதிபதியிடம் இன்று இருக்கிறார்கள்.

மேலும் பொதுஜன பெரமுன மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாட்டில் இனவாதத்தை அடிப்படையாக கொண்டு ஆட்சிக்கு வந்த கட்சியாகும்.

இந்நிலையில் அதிகாரப் பகிர்வுக்கு பொதுஜன பெரமுனவின் ஆசீர்வாதம் மற்றும் நிறைவேற்றுவதற்கான அனுமதி கிடைக்குமா? என்பதை ஜனாதிபதி முதலில் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லை எனில் நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு இடமில்லை என்றார். (ம-7)

மகாவம்சத்துடன்

# நாம் அறிந்த வரலாற்றில் பெரிய வித்தியாசம் - ரணில்

(கொழும்பு)

மகாவம்சத்துடன் நாம் அறிந்த வரலாற்றில் பெரிய வித்தியாசம் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வரலாற்று ஆய்வுநிறுவனமொன்றைஸ்தாபிக்க வேண்டும். நாம் வரலாற்றை மறந்துவிடுகிறோம் என குறிப்பிட்டுள்ளார்.

எனவே, வரலாறு குறித்த அறிவையும், ஆராய்ச்சியையும் முன்னெடுப்பதற்காக இந்த நிறுவனம் செயற்பட வேண்டும் என்றார். (ம-7)

# உயர்தர மாணவர்களுக்கு நிவாரண வேலைத்திட்டம்

(கொழும்பு)


பாடசாலைக்கு வருவதில் சிரமங்களை எதிர்நோக்கும் உயர்தர மாணவர்களுக்காக சில நிவாரண வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக் கும் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13551)
076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (13596)

விற்பனைக்குண்டு
புத்தம் புதிய கல் உடைக்கும் இயந்திரம்
10'' (250mm) x 16''(400mm)
இரண்டு விற்பனைக்கு உண்டு.
Brand new Metal crusher
10'' (250mm) x 16''(400mm)
For Sale.



(13621)
077 719 4373

D.C.M N
யாழ். நகர்
( யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை )
புதிய பிரிவுகள்
A/L 2024
கலை, வர்த்தக வகுப்புக்கள்
03.12.2022 சனிக்கிழமை
காலை 8.00 மணி
(C-5362)

வேலையாள் தேவை
திருநெல்வேலியில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகாமையிலுள்ள எமது கணக்கியல் நிறுவனத்திற்கு
1. காரியாலய உதவியாளர்
A/L தகைமை கொண்ட பெண்கள் தேவை. காரியாலயத்திற்கு அண்மையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது
2. கட்டிட பராமரிப்பாளர்
பிளம்பிங், வயறிங் தெரிந்த பகுதிநேர வேலையாட்கள். அருகாமையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. (13626)
தொடர்பு:- 074 368 0029

C.C.A
சுன்னாகம்
A/L 2024 வர்த்தகம்
கணக்கீடு - S.தவா
வணிகம் - N.S.கபில்
பொருளியல் - M.விஜிதன்
ஆரம்பம் டிசம்பர் - 03
காலை 9.00 மணி
(13613)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
திருமதி நிந்துஜா பன்னீர்தாசன்
அவர்கள் நீதியமைச்சரினால் நியமிக்கப்பட்டு மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி இரா.கண்ணன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக (24.11.2022) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
அவர் சேவைகள் மேலும் சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்:-
பகீரதன் றோசினி (மைத்துனர், சகோதரி)
நிமலதாஸ் (மைத்துனர்)
சிவம், வவி (மாமா மாமி)
வண்.வடமேற்கு, புதுறோட், ஆறுகால்மடம்.




(13615)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
● நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
● அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு - ஜெயம்
077 814 7389, 077 986 5457
(13624)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.